தினமணி

**கையும் காலும்தான் மிச்சம்!**

கே.எஸ். இராதாகிருஷ்ணன்

First Published : 19 Jan 2012 02:56:11 AM IST

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்பது மெய்ப்பட்டு, இன்றைக்கு விவசாயிகள் பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். புதிய பொருளாதாரக் கொள்கையால் கார்ப்பரேட் நிறுவனங்கள் என்றைக்கு இங்கு வந்தனவோ அன்றிலிருந்தே விவசாயம், சிறு தொழில்கள், கிராமப்புறத்தின் தனித்தன்மைகள் போன்ற யாவும் நசிந்து வருகின்றன.

விவசாயிகள் தற்கொலை எண்ணிக்கை 5,56,193 என்று தேசியக் கணக்குத் தகவல் அறிக்கை சொன்னாலும், அதைவிட அதிகமான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள் என்பதுதான் உண்மைக் கணக்காக இருக்கும். விவசாயிகள் தற்கொலைப் பிரச்னையில் முதல் ஐந்து இடங்களில் மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

இந்தியாவில் விவசாயக் குடும்பங்கள் 48.6 சதவிகிதத்தினர் கடனில் சிக்கித் தவிக்கின்றனர். இதில் ஆந்திரம் முதலிடம். தமிழகம் இரண்டாமிடம். அதாவது, 74.5 சதவிகிதத் தமிழக விவசாயிகள் விளைச்சல் பாதிக்கப்படுவதால் மூலதன செலவினங்களுக்கும் அமைப்புசார்ந்த, அமைப்புசாராத குடும்பச் செலவுகளுக்கும் கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

விவசாய நிலங்களின் அளவும் குறைந்து வருகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், வீட்டுமனைகள் என 20 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள் காணாமல் போய்விட்டன. கிராமப்புறத்தில் வாழ்வது சிரமம் என்று பலர் நகர்ப்புறத்தை நோக்கி வந்துவிட்டனர். விவசாய வேலைக்கு ஆள் கிடைப்பதில்லை. மத்திய அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தால் விவசாயப் பணிகளுக்கு ஆள்கள் வருவதில்லை. விவசாயிகள், நிலங்களைத் தரிசாகப் போட்டுவிட்டு வேறு தொழிலுக்குச் சென்றுவிடுவதாலும் நகரத்துக்குச் சென்று வேறு தொழில் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்றும் எண்ணி விவசாயத்தை ஒருவர் பின் ஒருவராகக் கைவிடத் தொடங்கி இருக்கிறார்கள்.

கிராமப்புற மக்கள்தொகை 10 சதவிகிதம் வரை குறைந்துவிட்டது என்று 2011 கணக்கெடுப்பு சொல்கிறது. ஒவ்வொரு பத்தாண்டு கணக்கெடுப்பும் கிராமப்புற மக்கள்தொகை குறைந்து வருவதைக் காட்டுகிறது. கிராமத்திலிருந்து பிழைக்க முடியாது என்ற நிலையில்தான் விவசாயிகள் நகர்ப்புறத்துக்கு இடம் பெயர்கின்றனர்.

வறட்சி, விளைபொருள்களுக்கு ஆதரவற்ற விலை, கடன் சுமை போன்றவற்றால் விவசாயிகளுடைய சமூக நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்திய நாட்டின் முதுகெலும்பு விவசாயமே என்று மார்தட்டிக் கொள்ளும் அரசு, விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய பொருளாதாரச் சட்ட திட்டங்களை இன்னும் திருப்திகரமாக வகுக்கவில்லை என்பதே உண்மை. பசுமைப் புரட்சி, மானியங்கள் மற்றும் சலுகைகள் அளிக்கப்பட்டும் அவை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்குச் சரியாகச் சென்றடையாமல் இடைத்தரகர்கள் பயன்பெறும் நிலைதான் தொடர்கிறது.

விவசாயிகளுக்கு வங்கிகள் கடன் கொடுக்கும்பொழுது, அவர்களிடம் எந்தவித பிணையும் கேட்கக் கூடாது என இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது. இந்நிலையில், கடன் வாங்க விவசாயிகள் வங்கிக்குச் சென்றால் வங்கி அதிகாரிகள், உன் கூரை வீட்டை நம்பி எப்படி கடன் கொடுப்பது என்று விரட்டியடிக்கும் செய்திகளும் வந்தவண்ணம் உள்ளன. ரிசர்வ் வங்கியின் அறிவுரை கடைப்பிடிக்கப்படாததால், அங்குள்ள விவசாயிகள் தனியாரிடம் கடன் வாங்கி, வட்டிக்கு மேல் வட்டி கட்டி மிகவும் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

தமிழகத்தில் கரும்பு விவசாயிகள் தாங்கள் விளைவித்த கரும்பை வெட்டி அறவை செய்ய முடியாமல் விரக்தியோடு, நன்கு வளர்ந்த கரும்பைத் தீயிட்டுக் கொளுத்துகிற அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஒரு சமயம், திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு விவசாயி தன் கரும்பை யார் வேண்டுமானாலும் வெட்டி எடுத்துச் செல்லுங்கள் என்று தண்டோரா போட்டு அறிவித்தார்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி முத்தரப்புக் கூட்டம் கூட்டி கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யுங்கள் என்றும், கரும்பு வாகன வாடகை சரியாக வழங்குவதில்லை என்றும் விவசாயிகள் குறை கூறுகின்றனர். கரும்பை அறவை செய்யப் பதிவு செய்து 18 மாதங்களுக்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலைமையால் அடிமாட்டு விலைக்குக் கரும்பை விற்க வேண்டியுள்ளது.

தென்னை உற்பத்தி விவசாயிகளின் நிலைமையும் மோசமாக உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக ஏற்பட்ட நோயால் பல மரங்கள் பட்டுப்போய் விட்டன. நிவாரணம் கிடைக்காமல் தென்னை விவசாயிகளும் போராடி வருகின்றனர்.

1960-ம் ஆண்டு நெல் மூட்டை ரூ. 30. சிமெண்ட் மூட்டை அப்போது ரூ.5-க்கு கிடைத்தது. சிமெண்ட் விலை பன்மடங்கு ஏறிவிட்டது. ஆனால், நெல்லுக்கு விலை அதற்கேற்றவாறு ஏறியதா என்றால் இல்லை. மிளகாய், பருத்தி உற்பத்தி செய்யும் மானாவரி விவசாயிகளுக்கு 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஆதரவான நல்ல விலை கிடைக்கிறது.

ஓராண்டுப் பராமரிப்பில் வாழை பயிரிட்டு ஒரு வாழைப்பழம் 10 பைசாவுக்கு விவசாயியிடம் வாங்கி, நகரத்தில் ரூ.1.50-க்கு விற்கப்படுகிறது. இந்த ஓராண்டு காலத்தில் காற்றின் சீற்றத்தால் சில சமயங்களில் வாழை மரங்கள் சாய்ந்து அழிவதும் உண்டு. தரகரின் லாபம் உறுதி என்றும் விவசாயிக்கு எஞ்சுவதெல்லாம் கையும் காலும்தான் என்றும் விவசாயிகளின் நிலைமை தொடர்கிறது.

விவசாய உற்பத்திப் பொருள்களின் விலை கட்டுப்படியான வகையில் நிர்ணயிக்க சம்பந்தப்பட்ட அதிகார வர்க்கம் பாராமுகமாகவே உள்ளது. இப்படித் தொடர்ந்து இடைத்தரகர்களால்

விவசாயிகள் வஞ்சிக்கப்படுவதால் செலவில்லாமல் பல கிராமங்களில் கருவேல மரங்களை நட்டுவிட்டனர்.

தமிழகத்தில் காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு பிரச்னையால் விவசாயிகள் நீர் ஆதாரங்கள் இல்லாமல் அவதிப்படுகின்றனர். கிராமப்புறங்களில் ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் தூர்வாராமல் நீர்ப்பிடிப்பு குறைந்து வருகிறது. விவசாயிகள் சார்புத் தொழிலாக நடத்தும் பால் பண்ணைகளையும், ஆட்டுப் பண்ணைகளையும் தொடர்ந்து நடத்த முடியாமல் தவிக்கின்றனர்.

1870-ல் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சமும் பட்டினியும் சொல்லில் அடங்கா. அந்தக் காலகட்டத்தில்கூட நமது இயற்கை விவசாயத்தைக் கைவிடாமல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தோம். பணப் பயிர்கள் மூலம் பணப்புழக்கம் ஏற்பட்டதன் விளைவாக டெல்டா பிரதேசத்தில் நெல்லை மாற்றி பணப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. காவிரி டெல்டாவில் நெல்லும் ஒன்றுபட்ட நெல்லை, கோவை மாவட்டங்களில் பருத்தி, நெல், தென்னையும் ஒன்றுபட்ட ராமநாதபுரம், நெல்லை மாவட்டத்தில் மிளகாய், சோளம் மற்றும் பருப்புப் பயிர்கள் ஒன்றுபட்ட வடாற்காடு, தென்னாற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் நிலக்கடலையும் தென்னாற்காடு, தஞ்சை மாவட்டங்களில் கரும்பும் என ஆண்டாண்டு காலமாகப் பயிரிடப்பட்ட நடைமுறைகள் இன்றைக்கு இல்லை.

இப்படி ஆதியில் நமக்கு நாமே வகுத்துக் கொண்ட இயற்கை விவசாய நெறிமுறைகளை நாமே மாற்றிக் கொண்டதால் ஏற்பட்ட விளைவே இப்போது விவசாயத்தில் ஏற்பட்டுள்ள விபரீத நெருக்கடியாகும்.

வெளிநாட்டினர் மான்சாண்டோ விதைகள் கொண்டு வந்து நம் நாட்டில் விதைத்து நம் பூமிக்குக் கேடு செய்தனர். நம்மிடம் இருந்த விதைகளைத் திருடி அப்புறப்படுத்தியதால்தான் கேடு தருகிற இம்மாதிரி விதைகளை வாங்குகிற சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

கடந்த காலங்களில் மான்சாண்டோ விதைகளால் பருத்திக் காய்கள்கூட வெடிக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் விவசாயிகள் போராடி நஷ்டஈடு பெற்றனர்.

தமிழகத்தில் 1933-ல் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், நெல்லை மாவட்டத்தில் மணியாச்சி விவசாயிகள் கிளர்ந்தெழுந்து போராடியபோது குண்டடிபட்டு ஒரு விவசாயி மடிந்தார். 1965-லிருந்து விவசாயிகள் போராடி, 35 பேருக்கு மேல் காவல் துறையினரின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகியுள்ளனர். நாராயணசாமி நாயுடு இயக்கம் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் கவனத்தையும் தன் பக்கம் திரும்ப வைத்தது. ஆனாலும் தான் என்ன பயன்? விவசாயியின் பிரச்னைகளும் தீரவில்லை. நிலையும் உயர்ந்தபாடில்லை.

இந்நிலையில் குறைந்தபட்சம் சில நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளைக் கடன் தொல்லையிலிருந்து முழுவதுமாக மீட்க வேண்டும். கடனுக்கான வட்டியை 4 சதவிகிதமாகக் குறைப்பதோடு கூட்டு வட்டியும் ரத்து செய்ய வேண்டும். வறட்சி, வெள்ள காலங்களில் முழுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும்.

பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை விரிவாக்க வேண்டும். விலை ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, சீரான லாபகரமான விலையை விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு வழங்க ஒரு நிதியம் ஏற்படுத்த

வேண்டும். விவசாய உற்பத்திப் பொருள்களில் இடைத்தரகர்கள் அடிக்கும் கொள்ளையைத் தடுக்க வேண்டும். பயிர் இழப்புக்கு ஆளாகும் விவசாயிகளைப் பாதுகாக்க பேரிடர் நிதியம் ஒன்றை அமைக்க வேண்டும்.

தொழில் சார்ந்த விவசாய முறையைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளின் தற்கொலை குறித்து உரிய ஆய்வு மேற்கொண்டு அதைத் தடுக்கக் கூடிய வகையில் சட்டவடிவமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விவசாயப் பண்டங்களின் இறக்குமதியைப் பெருமளவில் கட்டுப்படுத்த வேண்டும். விவசாயத்துக்கு நீர் ஆதாரங்களைப் பெருக்க வேண்டும்.

இக்கோரிக்கைகளை நன்கு பரிசீலனை செய்தால் விவசாயத்துக்கு விடிவுகாலம் ஏற்படும். விடுதலைக்குப் பின் விவசாய நலன் கருதிப் பல குழுக்கள் அமைத்தும் அவற்றின் அறிக்கைகளும், பரிந்துரைகளும் கும்பகர்ண தூக்கத்தில் தூசிபடிந்த நிலையில் உள்ளன. விவசாய சங்கத் தலைவர் மறைந்த பானுபிரதாப் சிங், சரத்ஜோஷி போன்றோர் பலமுறை அகில இந்திய அளவில் விவசாயிகளின் போராட்டங்களை நடத்தி விவசாயத்தை ஒரு தொழிலாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர்.

விவசாயத்துக்கு வேண்டிய இடுபொருள்களான விதை, ரசாயன உரங்கள் மற்றும் ரசாயன மருந்துகள் ஆகியவற்றுக்கு ஆகும் செலவு, தங்களுடைய குழந்தைகள் அருகில் உள்ள நகரத்தில் படித்தால் அதற்கான செலவு ஆகியவற்றையும் ஏற்றுக்கொண்டு, தன்னுடைய சொந்த மண்ணின் மணத்தைச் சுவாசித்து, தன் தொழிலைச் செய்துகொண்டே வருகின்றான்.

இந்த உழைப்பால்தான், இந்திய உணவு நிலைமையில் தன்னிறைவு அடைந்துள்ளது என்று பெருமை கொள்கிறது. இந்நிலை ஆரோக்கியமாக நீடிக்க வேண்டுமானால் மத்திய, மாநில அரசுகளின் கடைக்கண் பார்வை விவசாயிகள் மீது விழவேண்டும்.

**பதரை அறுவடை செய்யும் விவசாயிகள்: கடலூரில் "விளைந்த' சோகம்**

த. தேவராஜ்

First Published : 19 Jan 2012 02:51:43 AM IST



கடலூர்,ஜன.18: புயலால் நெற்பயிர் பாதிக்கப்பட்டதால் அவற்றை அறுவடை செய்யும் போது 50 சதவீதத்திற்கும் மேல் பதராக இருப்பதாக கடலூர் மாவட்ட விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

கடலூர் மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் காவிரி டெல்டா பாசனப் பகுதிகள் உள்ளிட்ட 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டு இருந்தது. டெல்டா பாசனப் பகுதிகளுக்கு விவாயிகள் எதிர்பார்த்தபடி, முன்னரே மேட்டூர் தண்ணீர் கிடைத்தது. விவசாயிகள் மிகுந்த உற்சாகத்துடன் சம்பா சாகுபடி பணிகளை நிறைவு செய்தனர். விளைச்சல் அமோகமாக இருக்கும் என்று எதிர்பார்த்த விவசாயிகளுக்கு, கடந்த மாதம் வீசிய புயல் ஏமாற்றத்தை அளித்து விட்டது.

மாவட்டத்தின் டெல்டா பகுதிகளில் வடவாறு மற்றும் வடக்குராஜன் வாய்க்கால் பாசனப் பகுதிகளில் தான் முதலில் அறுவடை தொடங்கும். அதுபோல் வடவாறு பாசனப் பகுதிகளான 11 ஆயிரம் ஏக்கரில், இயந்திரம் மூலமாகவும் கையறுப்பாகவும் அறுவடை நடைபெற்று வருகிறது.

÷ஆனால் அறுவடையான நெல்லைத் தூற்றினால் 50 சதத்துக்கு மேல் பதராகவே இருப்பதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். பரவலாக நடப்பட்ட பிபிடி ரகம் பயிரில் நெல் மணிகளை, புயல் வாறிச் சென்று விட்டது. ஏடிடி 38 ரக பயிர், இயந்திரத்தால் அறுவடை செய்ய முடியாத அளவுக்கு, புயலால் வயலில் விழுந்து கிடக்கிறது. வடவாறு பாசனப் பகுதிகளில் ஏக்கருக்கு சாராசரியாக 2,400 கிலோ நெல் கிடைக்கும். தற்போது கிடைத்து இருப்பது 1,200 கிலோ. அதன் அரசு கொள்முதல் விலை ரூ.13,200. அறுவடைச் செலவு ஏக்கருக்கு ரூ. 3,200 போக, விவசாயிக்குக் கிடைப்பது ரூ.10 ஆயிரம். ஆனால் விவசாயி செலவிட்ட தொகை ரூ. 15 ஆயிரம். அரசு கொடுக்கும் நிவாரணம் ரூ. 4 ஆயிரம்.

இனிமேல் அறுவடையாக இருக்கும் கடைமடைப் பகுதிகளில், நெல்பயிர் பூத்து பால் பிடிக்கும் நிலையில் புயல் தாக்கியது. எனவே இதை அறுவடை செய்தால் 20 சதம்தான் மகசூல் கிடைக்கும் என்கிறார்கள் விவசாயிகள். கடைமடைப் பகுதிகளில் சாதாரணமாக மகசூல் ஏக்கருக்கு 1,800 முதல் 2 ஆயிரம் கிலோ தான். தானே புயல் தாக்கியதால் கிடைக்கும் மகசூல் மதிப்பு ரூ.3,600 முதல் ரூ. 4 ஆயிரம் வரைதான். எனவேதான் ஏக்கருக்கு ரூ. 3,200 செலவிட்டு அறுவடை செய்ய வேண்டுமா என்ற கேள்வி டெல்டா விவசாயிகள் மனதில் எழுந்துள்ளது. இவர்களும் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம், சாகுபடிக்காகச் செலவிட்டுள்ளனர்.

கடலூர் டெல்டா பகுதிகளில் ஆண்டுதோறும் 96 அரசு நெல் கொள்முதல் நிலையங்கள், ஜனவரி 10-ம் தேதியே திறக்கப்பட்டுவிடும். இந்த ஆண்டு, கொள்முதல் நிலையங்கள் திறப்பது பற்றி இதுவரை அறிவிப்பு ஏதும் வெளியிடப்படவில்லை. கடலூர் டெல்டா விவசாயிகளுக்கு, இந்த ஆண்டு மட்டுமே புயல் பாதிப்பு என்று கூறிவிட முடியாது. பெரும்பாலான ஆண்டுகளில் அவர்கள் புயல், வெள்ளச் சேதங்களை பெரிதும் சந்தித்து வருகிறார்கள்.

எனினும் டெல்டா விவசாயிகளுக்குக் கைகொடுப்பது, நெல் வயலில் ஊடுபயிராக பாரம்பரிய முறையில் விதைக்கப்படும் உளுந்து. ஆனால் தானே புயலால் பயிர்கள் சாய்ந்து கிடக்கும் வயல்களில், உளுந்து விதைப்புக்கு இவ்வாண்டு வாய்ப்பில்லை என்றாகி விட்டது. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தில் பயறு வகைகள் உற்பத்தியை ஊக்கப்படுத்தும் நிலையில், உளுந்தைத் தனிப்பயிராக சாகுபடி செய்யும் முறையை, கடலூர் மாவட்ட டெல்டா பகுதிகளில்

அறிமுகப்படுத்தி, ஊக்குவிக்க வேண்டும் என்கிறார்கள் விவசாயிகள். இது குறித்து மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், டெல்டா பகுதிகளில் நெல் சாகுபடி, ஓராண்டு பயிராகத்தான் உள்ளது. புயல் பாதித்த கடலூர் மாவட்டத்தில் கரும்பு, வாழை உள்ளிட்ட ஓராண்டுப் பயிர்களுக்கு, சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கிறது.

அது போல் டெல்டா பகுதிகளில், உளுந்து தனிப்பயிராக சாகுபடி செய்யும் முறையை, வேளாண் துறை மூலம் அறிமுகம் செய்து, மத்திய மாநில அரசுகள் மானியம் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம், டெல்டா விவசாயிகளுக்கு நிரந்தர மறுவாழ்வு கிடைக்கும் என்றார்.

**சிறந்த இயற்கை உரமாகும் தென்னை நார்க்கழிவு!**

First Published : 19 Jan 2012 02:37:45 AM IST



தருமபுரி: தென்னை நார் கழிவிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரம், விளைநிலத்தின் ஈரப்பதத்தைக் காக்கும் என்று கயிறு வாரியம் தெரிவித்துள்ளது. இந்த வகையில் இயற்கை உரம் தயாரிப்போருக்கு கயிறு வாரியம் ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்குகிறது.

இது குறித்து கயிறு வாரியம் தெரிவித்துள்ளதாவது:

தென்னை மரத்திலிருந்து விளைபொருளாகக் கிடைக்கும் தேங்காய், மனித வாழ்வில் பல விதத்திலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், தேங்காயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் தேங்காய் மட்டைகளோ முழுவதுமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. மேலும், தென்னை நாரை பிரித்தெடுக்கும்போது உபரியாகக் கிடைக்கும் நார் கழிவுகளைப் பயன்படுத்தும் முறையைப் பெரும்பாலான விவசாயிகள் உணராமலேயே உள்ளனர். இதனால் பல இடங்களிலும் நார் கழிவு வீணாக்கப்பட்டு வருகின்றன.

நார் கழிவிலிருந்து இயற்கை உரம் தயாரித்து விளைநிலத்தை பண்படுத்துவதுடன், தேவையற்ற ரசாயன உரச் செலவுகளையும் கட்டுப்படுத்தலாம்.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் கிலோ நார் கழிவுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு கிலோ கயிறு நார் உற்பத்தி செய்யப்படும்போது 2 கிலோ நார் கழிவு கிடைக்கிறது. இந்த வகையில் மொத்தம் ரூ.20 கோடி மதிப்புள்ள இயற்கை உரம் தயாரிக்க வழி உள்ளது. ஆனால், நடைமுறையில் இத்தகைய இயற்கை உரம் தயாரிக்கப்படுவதில்லை.

வீணாகும் நார் கழிவை பயனுள்ளதாக மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்நாடு வேளாண்மைப் பலக்லைக்கழகத்துடன் இணைந்து, கயிறு வாரியம் நடத்திய சோதனைகளால் இயற்கை உரம் தயாரிக்கும் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் நார் கழிவுகளை ஒரு மாதத்தில் இயற்கை உரமாக மாற்ற முடியும். இவற்றுக்கு அடிப்படைக் காரணியாக "பிளேரேட்டஸ்' எனும் நுண்ணுயிர் காரணியாக உள்ளது. நாய் குடை வகையைச் சேர்ந்த இந்த நுண்ணுயிரே நார் கழிவை இயற்கை உரமாக மாற்றுகிறது. இதற்கு உறுதுணையாக யூரியா சேர்க்கையும் உள்ளது.

**நார் கழிவு தயாரிக்கும் முறை**

விவசாயிகள் தங்களது தோட்டங்களிலேயே நார் கழிவை இயற்கை உரமாக மாற்ற முடியும். திறந்த வெளியில் நிழல் உள்ள இடங்கள் சிறந்தவை. 5 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் உள்ள இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். இதில், 100 கிலோ நார் கழிவை சீராகப் பரப்ப வேண்டும். இதனுடன் 400 கிராம் "பித் பிளஸ்' சேர்க்கவும். இந்த அடுக்கின் மீது 100 கிலோ நார் கழிவை பரப்ப வேண்டும். இதனுடன் 1 கிலோ யூரியாவை சேர்த்து பரப்பவும்.

நார் கழிவு-பித் பிளஸ்-நார் கழிவு-யூரியா ஆகியவை சேர்ந்தது ஒரு அடுக்காக கணக்கிட வேண்டும். இதேபோல், 1 மீட்டர் உயரம் வரையில் பல அடுக்குகளை உருவாக்க வேண்டும். இவை உரமாக மாற ஒரு மாத காலம் தேவைப்படும். நார் கழிவு உலராமல் 200 சதவீதம் ஈரப்பதமாக வைத்திருக்க வேண்டும். இவை இயற்கை உரமாக மாறிய நிலையில் கறுத்த நிறமும், நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகியவை அதிக அளவில் காணப்படும். மேலும், கால்சியம், மெக்னீசியம், இரும்பு, துத்தநாகம், செம்பு உள்ளிட்ட கலவையும் கூடுதலாக இருக்கும்.


**மானியம் ரூ.1 லட்சம்**

நார் கழிவை உரமாக்கி பயிர்களுக்கு இடுவதன் மூலம் மண்ணின் வளத்தை மேம்படச் செய்கிறது. இது மண்ணின் ஈரப்பதத்தை காத்து வறட்சி காலத்தில் செடிகளுக்கு உதவுகிறது.

நார் கழிவை உரமாக மாற்றும் விவசாயிகளை ஊக்குவிக்க கயிறு வாரியம் ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்குகிறது. இதற்கு ஆகும் செலவு மிகக்குறைவு. ஒரு டன் நார் கழிவை உரமாக மாற்ற ரூ.50 மதிப்புள்ள 2 கிலோ பித் பிளஸ், ரூ.25 மதிப்புள்ள 5 கிலோ யூரியா தேவை. ஒரு டன் நார் கழிவில் 580 கிலோ இயற்கை உரம் உற்பத்தி செய்யலாம். மேலும், விவரங்களுக்கு கயிறு வாரிய மண்டல அலுவலகத்தை 04259-222450 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**நஞ்சில்லா உணவுப் பொருள் உற்பத்திக்கு அங்கக வேளாண் முறை**

First Published : 19 Jan 2012 02:36:29 AM IST



ஈரோடு: மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் அங்கக வேளாண்மை முறையை கையாண்டு நஞ்சில்லாத சுத்தமான சுவையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யலாம்.

வேளாண் அதிகாரிகள் தெரிவித்தது: இயற்கையாக கிடைக்கும் எந்தவொரு வேளாண் இடுபொருளையும் சுற்றுச்சூழலுக்கு தீங்கிழைக்கா வண்ணமும் மண் வளத்தையும் நலத்தையும் பேணி மனித மற்றும் கால்நடை வளத்தையும் காக்கும் வண்ணமும் பயன்படுத்தி இயற்கை வளத்தினை பாதுகாத்து மேம்படுத்தி வேளாண்மை செய்வதே அங்கக வேளாண்மை ஆகும்.

பயிர் சுழற்சி, ஊடுபயிர், கவர்ச்சிப்பயிர், நீர் மேலாண்மை, சரியான விதைக்கும் மற்றும் அறுவடை செய்யும் பருவம் ஆகியவற்றை கடைபிடிப்பதன் மூலம் பூச்சி நோய்களால் ஏற்படும் பாதிப்பை வெகுவாக குறைக்கலாம். பல்வேறு இயற்கை சக்திகளான வெப்பம், குளிர்ச்சி, ஒளி மற்றும் ஒலி ஆகியவற்றைக் கொண்டு பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

தானியங்களை நன்கு வெயிலில் காயவைத்து அதன் ஈரப்பதத்தை 8ல் இருந்து 10 சதவீதம் என்ற அளவுக்கு குறைப்பதன் மூலம் பூச்சிகளை தவிர்க்கலாம். மஞ்சள் நிற ஒட்டுப்பொறி, கருவாட்டுபொறி போன்றவற்றைக் கொண்டும் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்.

இயற்கை வேளாண்மையில் பயிர் செய்ய பூச்சி நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட ரகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக நெல்லில் புகையான் எதிர்ப்புத்திறன் கொண்ட கோ 42, தண்டுதுளைப்பான் எதிர்ப்புதிறன் கொண்ட டி.கே.எம்.6, சோளத்தில் குருத்து ஈயைத் தாங்கி வளரும் கோ 1 மற்றும் பருத்தியில் தண்டுக் கூன்வண்டு எதிர்ப்புத்திறன் கொண்ட எம்.சி.யு3 போன்ற ரகங்களை பயன்படுத்தலாம்.பூச்சிகளை தாக்கி அழிக்க வல்ல உயிரினங்களைக் கொண்டு பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தலாம். பொறி வண்டு, பச்சை கண்ணாடி,

இறக்கைப்பூச்சி போன்ற உண்ணிகள், டிரைக்கோகிராமா, பிராக்கான் போன்ற ஒட்டுண்ணிகள் மற்றும் பாக்டீரியா, வைரஸ் மற்றும் பூஞ்சானங்கள் ஆகியவற்றைக் கொண்டும் பூச்சிகளை அழிக்கலாம்.

பயிர்களைத் தாக்கும் நோய்களை சூடோமோனஸ், டிரைக்கோ டெர்மா போன்ற நுண்ணுயிரிகளுடன் விதை நேர்த்தி மூலமோ மண்ணில் இட்டோ கட்டுப்படுத்தலாம். பயிர்களை அழிக்கும் பூச்சிகளை இனக்கவர்ச்சிப் பொறிகளை பயன்படுத்தி சரியான தருணத்தில் கட்டுப்படுத்தலாம்.

**வேம்பு, பூண்டு:** தாவரங்களிலிருந்து கிடைக்கும் பூச்சிக் கொல்லிகளை இயற்கை வேளாண்மையில் பயன்படுத்தலாம். வேம்பு, நொச்சி, பூண்டு ஆகியவற்றின் கரைசல்கள் பல்வேறு

பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதை கண்டறியப்பட்டுள்ளது. மானாவாரி சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் இந்த உத்திகளைக் கையாண்டு பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவதன் மூலம் குறைந்த பயிர் உற்பத்தி செலவில் மண்வளம் மற்றும் நீரின் தன்மை மாறாமல் பாதுகாத்து நஞ்சில்லா சுத்தமான சுவையான உணவுப்பொருட்களை உற்பத்த செய்யலாம்.

**"கோழிகளின் தீவன எடுப்பு உயரும்'**

First Published : 18 Jan 2012 11:23:53 AM IST

நாமக்கல், ஜன.17: நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை: அடுத்த 3 நாள்களுக்கான நாமக்கல் மாவட்டத்தில் அதிக குளிர்ச்சி காரணமாக பகல் வெப்பம் 30 டிகிரியாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 15 டிகிரி செல்சியஸ0கவும் இருக்கும்.
காற்றின் ஈரப்பதம் 37 முதல் 85 சதவீதமாகவும் காணப்படும். இத்தகைய சீதோஷ்ணநிலை கோழிகளிடையே தீவன எடுப்பை மிக அதிகமாக உயர்த்தும். முட்டை உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும். எனவே, கோழிகளுக்கு தீவனத்தை அதிகப்படுத்தி வழங்க வேண்டும். பூஞ்சான பரிசோதனை செய்யப்பட்ட பிறகே தீவன மூலப் பொருள்களை பயன்படுத்த வேண்டும்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வலியுறுத்தல்**

First Published : 18 Jan 2012 12:19:23 PM IST

காரியாபட்டி, ஜன. 17: நரிக்குடி அருகே உள்ள சாலை இலுப்பைகுளத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கிருதுமால் நதி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் உலக்குடி செல்வம், செயலாளர் முத்துபாண்டி ஆகியோர் அந்தப்பகுதி சுற்று வட்டார பொதுமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியர் பாலாஜியிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

உலக்குடி, சாலைஇலுப்பைகுளம், இசலி, பனைக்குடி, கண்டுகொண்டான் மாணிக்கம், தீயனூர், கொட்டுமுறி, நாலூர், உழுத்திமடை, புதுக்குளம், கட்டாளங்குளம், ஏ.முக்குளம் உள்பட 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 6 ஆயிரம் ஏக்கரில் நெல் விளைச்சல் அமோகமாக உள்ளது.

இப்பகுதியில் அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு சரியான விலை கிடைப்பது இல்லை. எனவே சாலை இலுப்பைகுளம் கிராமத்தில் அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டால் இப்பகுதி விவசாயிகளின் நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கும். எனவே சாலை இலுப்பைகுளம் கிராமத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை தொடங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

## பூண்டு சாகுபடியில் உரிய விலை : வத்தலக்குண்டில் வணிக மையம்

ஜனவரி 18,2012,11:45



திண்டுக்கல் : பூண்டு விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில், குழுக்கள் அமைக்க வேளாண் விற்பனை வணிக துறை முடிவு செய்துள்ளது. கொடைக்கானல் மலைப்பகுதியான வில்பட்டி, பூம்பாறை, கூக்கால், மன்னவனூர், பூண்டி கிராமங்களில் 650 எக்டேர் பரப்பில் பூண்டு சாகுபடி செய்யப்படுகிறது. பூண்டு பயிர் ஏப்ரல், மே, நவம்பர், டிசம்பர் ஆகிய இரு பருவங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் 3300 டன் பூண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

பூண்டு பயிர் சாகுபடியில் 3000 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பூண்டு பயிருக்கு கொடைக்கானலில் சந்தை வசதியில்லை. இதனால் தேனி மாவட்டம் வடுகபட்டியில் இயங்கும் பூண்டு சந்தையில் விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. இங்கு கமிஷன் கடைக்காரர்கள் விவசாயிகளுக்கு உரிய விலை கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எடை அளவுகளிலும் வித்தியாசம் உள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்க, மாவட்ட வேளாண் விற்பனை வணிகத்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பூண்டு விவசாயிகள், 15 முதல் 20 பேர் கொண்ட குழு அமைத்து, பூண்டு பதப்படுத்தும் வணிக நிறுவனங்களிடம் ஒப்பந்த பண்ணையம் மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, வத்தலக்குண்டு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், ஊரக வணிக மையம் அமைய உள்ளது.

இங்கு வணிக நிறுவனங்கள் மூலம் பூண்டு கொள்முதல் செய்யப்படும். இந்த மையத்தில் இடைத்தரகர் இல்லாததால், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும். கொடைக்கானல் பகுதி பூண்டு விவசாயிகள் தங்களது பகுதிகளில் குழுக்கள் அமைத்து பயன்பெறலாம், என, வேளாண்மை விற்பனை வணிகத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இயற்கை உரம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,00:13 IST

பல்லடம் : ரசாயன உரங்களில் இருந்து விவசாயிகள் இயற்கை உரங்களுக்கு மாறத்துவங்கியுள்ளதால், பல்லடம் பகுதியில் மாட்டுச்சாணம், கோழி எருக்கள் விலை உயர்ந்துள்ளன.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் தக்காளி, மக்காச்சோளம், பீட்ரூட், பொரியல் தட்டை, சப்போட்டா, வெங்காயம், காலிபிளவர் ஆகியவை முக்கிய பயிர்களாக விளைவிக்கப்படுகின்றன. இப்பகுதி விவசாயிகள், விவசாயத்தில் மிக அதிக அளவு மகசூல் பெற வேண்டும் என்ற நோக்கில், 15 ஆண்டுகளாக ரசாயண உரங்களை அதிக அளவில் பயன்படுத்தினர். இதன் காரணமாக, பெருமளவு நிலங்கள் மண்வளத்தை இழந்தன. இதனால் அதிர்ச்சி அடைந்த விவசாயிகள் பலர், தற்போது மீண்டும் இயற்கை உர விவசாயத்துக்கு மாறி வருகின்றனர். ரசாயண உரத்துக்கு பதிலாக கோழிப்பண்ணைகளில் மிக குறைவான விலையில் கிடைக்கும் இயற்கை உரமான கோழி எரு மற்றும் எளிதில் மண்ணோடு மண்ணாக மக்கி, பயிர் வளர்ச்சி, மகசூல் அதிகரிக்க உதவும் தொழுஉரம் (சாணம்) உள்ளிட்ட இயற்கை உரங்களை வாங்கி, பயன்படுத்த துவங்கியுள்ளனர். இதன் காரணமாக, கடந்த ஆண்டு ஒரு ரூபாயாக இருந்த எருவின் விலை தற்போது ரூ.1.20 ஆகவும், ஒரு மூட்டை மாட்டு சாணம் ரூ.40ல் இருந்து 45 ஆகவும் உயர்ந்துள்ளன.

**விதைச்சான்று ஆய்வாளர் பற்றாக்குறை நெல் விதை ஆய்வுக்கு ஆளின்றி அவதி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,00:13 IST

தாராபுரம் : தாராபுரம் பகுதியில் புற்றீசல் போல் உருவாகியுள்ள விதை நெல் உற்பத்தி நிலையங்களை கண்காணிக்க, போதிய விதைச்சான்று ஆய்வாளர்கள் இல்லாததால், அப்பாவி விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.தாராபுரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங் களில் விதை நெல் உற்பத்தி நிலையங்கள் புற்றீசல்போல் அதிகரித்து வருகின்றன. நெல் மணிகளை பக்குவப்படுத்தி, கருக்காய், கல், குருணையின்றி பிரித்தெடுத்து, பைகளில் அடைத்து, "விதைச் சான்று அதிகாரிகள் ஆய்வு செய்தது' என்ற போர்வையில், வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது.விதை நெல் உற்பத்தியாளர்களின் அபரிமிதமான வளர்ச்சியை பார்த்த, அவற்றின் ஊழியர்களுக்கும் சபலம் ஏற்பட்டது. விதை நெல் என்ற தொழில் நுட்பத்தை அறிந்த ஊழியர்கள், தனியாக உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துகின்றனர். அவர்களும் சந்தையில், நெல் விதைகளை விற்பனைக்கு அனுப்புகின்றனர்.முளைப்புத்திறன், புறத்தூய்மை, இனத் தூய்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதுதான் விதைச்சான்று ஆய்வாளர்களின் பணி. இவர்கள் விவசாயிகளின்

விளைநிலங்களுக்கு களப்பணியாக நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும். விவசாயி கள் விதை நெல் வாங்கும்போது, உற்பத்தி நிலையங்களின் முகவரி, போன் எண், சான்றளிக்கப்பட்ட விதையா என்பதை பார்த்து வாங்க வேண்டும்.ஒரு கிலோ நெல்லை ஒன்பது முதல் 11.80 ரூபாய்க்கு வாங்கும் விதை நெல் உற்பத்தியாளர்கள், விதை நெல்லாக தரம் உயர்த்தி விற்கும்போது, கிலோ 18 ரூபாய்க்கு விற்கின்றனர். தமிழக வேளாண் துறையில், விதைச்சான்று ஆய்வாளர்கள் பற்றாக்குறையால், முறைகேடாக உற்பத்தியாகும், விதை நெல்லையும், உற்பத்தி நிலையங்களையும் ஆய்வு செய்ய முடியவில்லை. விவசாயிகளின் வாழ்வாதாரத்தோடு விளையாடும், விதை உற்பத்தி நிறுவனங்களை கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் விரும்புகின்றனர்.

## சம்பா நெல்லில் நோய் தாக்கம் தடுப்பது எப்படி? வேளாண் இணை இயக்குனர் "அட்வைஸ்'

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,02:26 IST

தொட்டியம்: "தொட்டியம் வட்டாரத்தில் சம்பா நெல் பயிரில் தற்போதுள்ள நோய் தாக்குதலில் இருந்தும், பூச்சி தாக்குதலில் இருந்தும் எவ்வாறு பயிரினை பாதுகாப்பது?' என்பது குறித்து வேளாண்துறை இணை இயக்குனர் அறிவுரை வழங்கியுள்ளார்.

திருச்சி வேளாண் துறை இணை இயக்குனர் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கை: பருவ நிலை மாற்றத்தால் தொட்டியம், காட்டுப்புத்தூர், ஏலூர்பட்டி ஆகிய பகுதிகளின் 29 வருவாய் கிராமங்களில் சாகுபடி செய்துள்ள சம்பா நெல் பயிரில் இலை சுருட்டுப்புழு, குருத்துப் பூச்சி, ஆணைக் கொம்பன் மற்றும் கதிர் நாவாய்ப்பூச்சிகளின் தாக்குதலும், ஆந்திரா பொன்னி என்று அழைக்கப்படும் பி.பி.டி.5204 மற்றும் பொன்னி ரக நெல் பயிர்களில் குலை நோயும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. குருத்துப்பூச்சி தாக்குதலுக்குள்ளான நெற் பயிரில் நடு குருத்து காய்ந்து காணப்படும். பாதிக்கப்பட்ட நெற் குருத்தினை பிடித்து இழுத்தால் எளிதில் வந்துவிடும்.

கதிர் பருவத்தில் தாக்குதல் காணப்பட்டால் வெண் கதிராக மாறிவிடும். ஆணைக்கொம்பன் ஈயினால் பாதிக்கப்பட்ட பயிரிலிருந்து வெளிவரும் நடுக்குருத்து இலைகள் வெங்காய இலை போல காணப்படும். மேற்கண்ட பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த புரோபினோபாஸ் 400 மில்லி அல்லது குளோரிபாஸ் 500 மில்லி அல்லது பாஸ்மிடான் 500 மில்லி அல்லது டைகுளோபாஸ் 350 மில்லி அல்லது இமிடாகுளோபிரிட் 40 மில்லி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் அல்லது விசைத்தெளிப்பான் மூலம் தெரிவித்து கட்டுப்படுத்தலாம்.

கதிர் நாவாய்ப்பூச்சி தாக்குதல் பாதிக்கப்பட்ட நெற்பயிரில் உள்ள மணிகள் மட்டும் காய்ந்து காணப்படும். இதை கட்டுப்படுத்த மாலத்தியான் 200 மில்லி அல்லது வசம்பு பத்து கிலோ வீதம் இரண்டு முறை தெளித்து கட்டுப்படுத்தலாம். குலை நோயினால் பாதிக்கப்பட்ட நெல் பயிரில் முதலில் கண்வடிவ புள்ளிகள் ஏற்பட்டு, பின்பு இலையின் இருபுறமும் பரவி பயிர் காய்ந்துவிடும். இந்நோய் கதிர் பருவத்தில் காணப்பட்டால், நெல் குருத்துக்குச் செல்லும் சத்துக்கள் தடுக்கப்பட்டு,

கதிர் முழுவதும் முற்றாமல் காலியாகிவிடும். பாதிப்பு அதிகம் இருந்தால் எளிதில் குருத்து ஒடிந்துவிடும். இதை தவிர்க்க வயல்களில் தழைச்சத்து உரம் இடுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
இந்த நோயினை கட்டுப்படுத்த எடிபெண்டாஸ் 200 மில்லி அல்லது டிரைØளோசோல் (சிவிக்) 120 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றினை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து நன்கு பயிர் நனையும் படி தெளிக்க வேண்டும். ஆந்திரா பொன்னிக்கு இரண்டு முறை மருந்துதெளிக்க வேண்டும். நெல் கரிப்பட்டை நோயை லட்சுமி நோய் என்றும் கூறுவர்.
இந்நோய் தாக்குதலுக்கு உள்ளான பயிரில் உள்ள மணிகள் பழமாக மாறிவிடும். இதைக் கட்டுப்படுத்த புரோபிகோசோணோல் 100 மில்லி மருந்து, காப்பர் ஹைட்ராக்ஸைடு இவற்றில் ஏதாவது ஒன்றினை கைத்தெளிப்பான் மூலம் தெளித்து நோயினை கட்டுப்படுத்தலாம். மேலும், விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு வேளாண் அலுவலகத்தை அணுகி பதில் பெறலாம்.

**கரும்பு சேதத்தை கணக்கிடாத அதிகாரிகள் சேத்தியாத்தோப்பில் விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,00:33 IST

சேத்தியாத்தோப்பு:"தானே' புயலில் பாதிக்கப்பட்ட கரும்பு பயிரை கணக்கெடுக்க கூட அதிகாரிகள் முன்வராததால் கரும்பு விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.
கடந்த 30ம் தேதி வீசிய புயலால் பல லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் சேதமடைந்தன. சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலையை நம்பி 5,000 விவசாயிகள் 14 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிட்டுள்ளனர். இதில் 12 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிர் பெரும் சேதத்தை சந்தித்துள்ளது. இந்நிலையில் புயலால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிர் பற்றிய கணக்கெடுப்பு பணிகளைக் கூட வேளாண்மைத் துறையினர் முன்வரவில்லை.

நெல்லிக்குப்பம் தனியார் சர்க்கரை ஆலைக்கு உட்பட்ட பகுதியில் "தானே' புயலில் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கியுள்ள நிலையில் அரசு துறை சார்ந்த எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் அதிகாரிகள் கணக்கெடுக்க கூட முன் வராதது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.கீரப்பாளையம் ஒன்றியத்தில் அமைச்சர் காமராஜ், புவனகிரி ஒன்றியத்தில் அமைச்சர் பழனியப்பன் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட கரும்பு வயல்களை பார்வையிட்டு சென்றது வெறும் கண்துடைப்புதானா. கரும்பு டன் ஒன்றுக்கு 2,100 ரூபாய் விலை அறிவித்த முதல்வர் ஜெ.,யின் அறிவிப்பு சற்று ஆறுதலை தந்துள்ள நிலையில் வேளாண்துறை அதிகாரிகள் கரும்பு விவசாயிகளை கண்டுகொள்ளாததும், கணக்கெடுக்க கூடமுன் வராததும் கவலையளிப்பதாக கரும்பு விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

**முந்திரி, பலா கன்றுகளை வளர்க்க தேவை தண்ணீர் ஆய்வுக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,00:03 IST

கருத்தை பதிவு செய்ய

பண்ருட்டி:புயலில் சேதமடைந்த முந்திரி, பலா மரங்களை அகற்றி மீண்டும் புதிய கன்றுகள் நட்டு வளர்த்திட போதிய தண்ணீர் வசதியை அரசு ஏற்படுத்தி தர வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.வங்கக் கடலில் மையம் கொண்டு கடந்த 30ம் தேதி கடலூரில் கரையை கடந்த "தானே' புயல் மாவட்டத்தையே சின்னாபின்னமாக்கியது. நான்கு லட்சம் வீடுகள் சேதமடைந்தன. 3 லட்சத்து 26 ஆயிரத்து 957 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த விவசாய பயிர்கள் முற்றிலும் அழிந்தன.

குறிப்பாக பல ஆண்டுகள் பலன் தரக்கூடிய மா, பலா, முந்திரி, புளிய மரங்கள் வேரோடு சாய்ந்ததால் ஒரு லட்சம் விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்து பரிதவித்து வருகின்றனர். இவர்கள், நிலத்தில் கருகிய நிலையில் உள்ள மரங்களை வெட்டி அகற்றிடவே முடியாமல் தவித்து வருகின்றனர்.இம்மாவட்டத்தில் முந்திரி, மா, பலா மரங்கள் பெரும்பாலும் மானாவாரி நிலத்தில் பயிரிடப்பட்டு வந்துள்ளதால், தண்ணீர் வசதி இல்லாத இந்த நிலங்களில் வேறு பயிர் செய்யவும் இயலாத நிலை உள்ளது. இத்தனை சோதனைகளைக் கடந்து புயலில் கருகிய மரங்களை அகற்றி, புதிய மரக்கன்றுகள் வைத்தாலும் அதனை 10 ஆண்டுகள் பராமரித்த பிறகே வருவாய் ஈட்ட முடியும் நிலை உள்ளதால் விவசாயிகள் செய்வதறியாமல் பரிதவித்து வருகின்றனர்.

இவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்த தமிழக அரசு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த முன் வந்துள்ளது. இதுகுறித்து முந்திரி, பலா விவசாயிகளுடனான கலந்தாய்வுக் கூட்டம் நேற்று பண்ருட்டி தாலுகா அலுவலகத்தில் நடந்தது.புயல் நிவாரண சிறப்பு அதிகாரி ராஜேந்திர ரத்னு தலைமை தாங்கினார். கலெக்டர் அமுதவல்லி முன்னிலை வகித்தார். சப் கலெக்டர் கிரண் குராலா, தோட்டக்கலை துணை இயக்குனர் கனகசபை, பாலூர் காய்கறி ஆராய்ச்சி பண்ணை பேராசிரியர் கலைமணி, விருத்தாசலம் முந்திரி ஆராய்ச்சி பண்ணை பேராசிரியர் ஜீவா மற்றும் முந்திரி, பலா விவசாயிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் முந்திரி, பலா விவசாயிகள் பேசுகையில், புயலில் கருகிய மற்றும் முறிந்து விழுந்த முந்திரி மரங்களை அகற்றிட எக்டருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். சேதமடைந்த பயிர்களுக்கு ஏக்கருக்கு 50 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். மீண்டும் விவசாயம் செய்திட முந்திரி, பலா ஒட்டு ரக கன்றுகள் வழங்க வேண்டும்.இதனை பராமரித்திட 25 எக்டருக்கு ஒரு பொது ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். சென்னைக்குச் செல்லும் மெட்ரோ குடிநீரை விவசாயத்திற்கு வழங்க வேண்டும்.என்.எல்.சி., நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீரை விவசாயத்திற்கு பயன்படுத்திட வேண்டும். இப்பகுதியில் நிலத்தடி நீர் வளத்தை பெருக்கிட கெடிலம் ஆற்றில் "செக்டேம்' கட்ட வேண்டும். மாடு, ஆடுகளால் புதிய பயிர்கள் வீணாகும் என்பதால் கிராமம் தோறும் வருவாய்த்துறை சார்பில் பட்டி ஏற்படுத்த வேண்டும்.விவசாயிகளின் பிள்ளைகளின் கல்விச் செலவை அரசே ஏற்க வேண்டும் என வலியுறுத்திப் பேசினர்.பின்னர், அரசு செய்ய வேண்டிய உடனடி, இடைக்கால

மற்றும் நீண்டகால உதவிகள் குறித்து அதிகாரிகள் விவசாயிகளிடம் ஆலோசனை நடத்தினர்.இதுகுறித்து சிறப்பு நிவாரண அதிகாரி ராஜேந்திர ரத்னு நிருபர்களிடம் கூறுகையில், புயலில் பாதிக்கப்பட்ட முந்திரி, பலா விவசாயிகளுக்கு அரசு செய்ய வேண்டிய நடவடிக்கை குறித்து விவசாயிகளின் கருத்துரை கேட்கப்பட்டது. இதில் பல விவசாயிகள் உடனடியாக சேதமடைந்த முந்திரி மரத்தினை அகற்ற வேண்டும்.ஒட்டு ரக கன்றுகள் வழங்க வேண்டும். அதனை வளர்க்க தண்ணீர் வசதி, போர் வசதி, நிலத்தடி நீர் சேமிக்க கெடிலம் ஆற்றில் செக் டேம் கட்ட வேண்டும் என கூறியுள்ளனர். இதுகுறித்து அரசுக்கு அறிக்கை அளிக்கப்படும்' என்றார்.

**பயிர் நிவாரணம் பெற விவசாயிகள் பணம் தரத்தேவையில்லை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,00:24 IST

கடலூர்:கடலூர் மாவட்டத்தில் பயிர் சேத நிவாரணம் பெற விவசாயிகள் யாருக்கும் பணம் கொடுக்கத் தேவையில்லை என கலெக்டர் அமுதவல்லி தெரிவித்துள்ளார்.
அவரது செய்திக்குறிப்பு:கடலூர் மாவட்டத்தில் "தானே' புயலால் பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகைகளை வழங்குவதற்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களினால் விவசாயிகளுக்கு (நொ ஃபிரில்) சேமிப்பு கணக்குகள் துவங்கிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் விவசாயிகள் நிவாரணத் தொகையை பெற்றுக்கொள்ளலாம். பயிர் சேத நிவாரணத் தொகை பெற விவசாயிகள் யாருக்கும் பணம் கொடுக்கத் தேவையில்லை. இது தொடர்பான குறைகளை கடலூர், குறிஞ்சிப்பாடி மற்றும் பண்ருட்டி வட்டத்திற்கு கடலூர் சரக துணைப் பதிவாளர் 04142-293090, விருத்தாசலம், திட்டக்குடி வட்டங்கள் விருத்தாசலம் சரக துணைப் பதிவாளர் 04143-264884, 90435 58591, சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டங்கள் சிதம்பரம் சரக துணைப்பதிவாளர் 04142-225513, 94438 65118 என்ற போன் எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**தக்காளி விலை தொடர்ந்து வீழ்ச்சி : ஏற்றத்தை எதிர்பார்த்த விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,02:01 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஹைபிரிட் தக்காளி சாகுபடி பரப்பு அதிகரிப்பதால் உற்பத்தி அதிகரித்து தக்காளி விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5,000 ஹெக்டேரில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ராயக்கோட்டை, ஓசூர், பேரிகை, பாகலூர், தேன்கனிக்கோட்டை, கெலமங்கலம் மற்றும் சூளகிரி பகுதியில் விவசாயிகள் ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். இங்கு உற்பத்தியாகும் தக்காளி ஓசூர் பத்தலப்பள்ளி, ராயக்கோட்டை தக்காளி சந்தைகளில் இருந்து தினசரி கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு அதிகளவு ஏற்றுமதியாகிறது. வெளிநாடுகளுக்கு ஜாம் தயாரிக்கவும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து தக்காளி ஏற்றுமதியாகிறது.

கடந்த காலத்தில் விவசாயிகள் நாட்டு தக்காளி மட்டும் சாகுபடி செய்தனர். தற்போது கடந்த சில ஆண்டாக உற்பத்தியை அதிகரிக்க ஆப்பிள் போல் காணப்படும் பெங்களூரு தக்காளி, ஹைபிரிட் தக்காளி ஆகியவற்றை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். ஹைபிரிட் தக்காளியை பொறுத்தவரையில் ஏக்கருக்கு கூடுதலாக 2 டன் முதல் 4 டன் வரை கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. அதனால், ஹைபிரிட் தக்காளி வரத்து அதிகரித்து விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. கடந்த டிசம்பர் வரை தக்காளி செடிகள் கடும் பனிப்பொழிவால் அழிந்து தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டது.

தென் மாவட்டங்களிலும் கனமழையால் தக்காளி உற்பத்தி பாதிக்கப்பட்டதால், அங்கு தக்காளி விலை "கிடுகிடு'வென உயர்ந்தது. அதனால், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியான ஒட்டுமொத்த தக்காளியையும், வியாபாரிகள், தென்மாவட்டங்களுக்கு ஏற்றுமதியானது. இதனால், உள்ளூரில் தக்காளிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதால் தற்காலிக விலை உயர்வு ஏற்பட்டது. தற்போது, பனிப்பொழிவு குறைந்த நல்ல வெயில் அடிக்க துவங்கியுள்ளதாலும், ஹைபிரிட் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளதாலும், தக்காளி விலை வீழ்ச்சியடைந்து தற்போது கிலோ 4 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

ராயக்கோட்டை, பத்தலப்பள்ளி தக்காளி சந்தைகளுக்கும், உழவர்சந்தைக்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. கர்நாடகா, ஆந்திராவிலும் தற்போது ஹைபிரிட் தக்காளி சாகுபடி அதிகரித்துள்ளதால், அங்கும் தக்காளி மகசூல் அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட தக்காளி சந்தைகளில் தக்காளியை வாங்குவதற்கு வெளிமாநில வியாபாரிகள், ஆர்வம் காட்டவில்லை.

இதுகுறித்து உழவர்சந்தை அதிகாரிகள் கூறியதாவது: தற்போது உள்ள இந்த விலை வீழ்ச்சி தொடர்ந்து ஒரு மாதம் வரை நீடிக்க வாய்ப்புள்ளது. கடந்த ஆண்டு இதே நேரத்தில் தக்காளி கிலோ 25 ரூபாய் வரை விற்பனையாது. தற்போது, பெங்களூரு தக்காளி, ஹைபிரிட் தக்காளி உற்பத்தி அதிகரித்துள்ளதால், கடந்த எட்டு மாதமாக தக்காளி நிலையான விலையில் இல்லாமல் ஏறி, இறங்கி விலை உயரமாமல் இருந்து வருகிறது.

தற்போது, கிலோ 4 ரூபாய்க்கு விற்கும் தக்காளி மீண்டும் விலை குறைய வாய்ப்புள்ளது. கூடுதல் மகசூலுக்கு ஆசைப்பட்டு விவசாயிகள் ஹைபிரிட் சாகுபடி செய்வதால், உற்பத்தி அதிகமாகி விலை வீழ்ச்சியடைந்து தற்போது சாகுபடி செய்த செலவு, போக்குவரத்து செலவை கூட எடுக்காமல் திணறி வருகின்றனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## முட்டைகோஸ் விலை வீழ்ச்சி: விவசாயிகள் கலக்கம்

பதிவு செய்த நாள் : ஜனவரி 19,2012,01:58 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில், சாகுபடி செய்த முட்டைகோஸ் செடிகள் செழித்து வளர்ந்துள்ள நிலையில், விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

ஓசூர், தேன்கனிக்கோட்டை, பாகலூர், பேரிகை, பெலத்தூர், சூளகிரி, உத்தனப்பள்ளி மற்றும் கெலமங்கலம் பகுதியில், 2,000 ஹெக்டேரில் முட்டைகோஸ் சாகுபடி ஆண்டு முழுவதும் நடக்கிறது. ஊட்டிக்கு அடுத்தப்படியாக ஓசூரில்தான் அதிகளவு முட்டைகோஸ் உற்பத்தியாகிறது. இங்கு உற்பத்தியாகும் முட்டைகோஸ், கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் வடமாநிலங்கள், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு தினசரி ஏற்றுமதியாகிறது. அன்றாட சமையலில் முட்டைகோஸ், கூட்டுகிற்கும், குழம்பு மற்றும் பல்வேறு வகை சைவ உணவுகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், முட்டைகோஸ் வெங்காயத்திற்கு பதில் அதிகம் பயன்படுத்தப்படுவதால் விலை சந்தைகளில் நிலையானதாக காணப்படும்.

கடந்த ஒரு மாதமாக முட்டைகோஸ் உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் கடும் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இரு மாதத்திற்கு முன் 80 கிலோ கொண்ட ஒரு மூட்டை முட்டைகோஸ், 450 ரூபாயாக இருந்த முட்டைகோஸ் தற்போது, 200 ரூபாய்க்கு விற்பனையாகிறது. உற்பத்தி அதிகரிப்பால் தற்போது முட்டைகோஸ் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலையில், அடுத்த வர்த்திற்காக ஓசூர் பகுதியில் விவசாயிகள் அதிகளவில் முட்டைகோஸ் சாகுபடி செய்துள்ளனர். தற்போது, முட்டைகோஸ் விலை வீழ்ச்சியடந்துள்ளதால், சாகுபடி செய்த விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர். தற்போது, மழை சேதம் மற்றும் நோய் தாக்குதல் குறைவாக காணப்படுவதால், முட்டை கோஸ் மகசூல் அதிகரித்துள்ளது. வெங்காயம் விலையும் குறைவாக உள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இது குறித்து ஜிமங்கலத்தை சேர்ந்த விவசாயி மாரப்பா கூறியதாவது: தற்போது மழை குறைவு என்பதால், மழை சேதம், நோய் தாக்குதல் இல்லாததால், ஏக்கருக்கு, 30 டன் முதல் 40 டன் வரை மகசூல் கிடைக்கிறது. அதிக மகசூல் கரணமாக, திடீர் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. வடமாநிலங்களிலும் முன்போல் முட்டைகோஸ்களுக்கு வரவேற்பு இல்லை. அதனால், உள்ளூர் சந்தைகளுக்கு மொத்தமாக முட்டைகோஸ் வருவதால், விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த விலை வீழ்ச்சி தொடர்ந்தால் பராமரிப்பு செலவு, போக்குவரத்து செலவுக்கு கூட விற்பனை செய்த பணம் கிடைக்காது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## "அட்மா' திட்டத்தில் பணியாளர்கள் தேர்வு

பதிவு செய்த நாள் : ஜனவரி 18,2012,22:17 IST

தேனி : விவசாய தொழில் நுட்ப மேலாண்மை முகமை(அட்மா) திட்டத்தில் மாவட்ட அளவில், கணக்காளர் ,கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர்களும், வட்டார அளவில் தொழில் நுட்ப மேலாளர் மற்றும்

தொழில் நுட்ப பணியாளர்களும் ஒப்பந்த அடிப்படையில், மாதாந்திர தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட உள்ளனர்.

விதிமுறைகளின் அடிப்படையில், தகுதியான தனியார் வேலை வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பங்களை ஜன. 25க்குள், திட்ட இயக்குனர், அட்மா, விவசாய இணை இயக்குனர் அலுவலகம், பெருந்திட்ட வளாகம்-1,தேனி, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

---

தினகரன்

**மஞ்சள் விலை 80% சரிவு**

பதிவு செய்த நாள் : 1/19/2012 12:39:34 AM



போச்சம்பள்ளி : போச்சம்பள்ளி பகுதியில் மஞ்சள் விலை கடுமையாக சரிந்துள்ளது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பருவ மழை மற்றும் விளை பொருட்களுக்கு கிடைக்கும் விலை அடிப்படையில் விவசாயிகள் அந்தந்த காலத்திற்கு ஏற்றாற்போல பயிர் சாகுபடியில் மாற்றம் செய்கின்றனர். கடந்த ஆண்டில் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்தது. பொங்கல் பண்டிகையின் போது மஞ்சள் கொத்துக்கும் வரவேற்பு இருந்தது.

கடந்த ஆண்டு விரளி மஞ்சள் குவின்டாலுக்கு குறைந்தபட்சமாக ரூ.15,268க்கும், கிழங்கு மஞ்சள் ரூ.15,631க்கும் விற்பனையானது. நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதனால் நடப்பாண்டில், போச்சம்பள்ளி, மத்தூர், அரசம்பட்டி, புலியூர், தாதம்பட்டி,Êசந்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வழக்கத்தை விட அதிகமாக 10 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் மஞ்சள் பயிர் சாகுபடி செய்தனர்.

ஆண்டுதோறும் டிசம்பர் இறுதியில் மஞ்சள் அறுவடை செய்யப்பட்டு, ஈரோடு சந்தைக்கு விற்பனைக்கு வரும். இந்தாண்டு அதிக விலை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளுக்கு, ஏமாற்றம் மிஞ்சியது. ஈரோடு சந்தையில் கடந்த வார நிலவரப்படி, விரளி மஞ்சள் குவின்டால் அதிகபட்சமாக ரூ.3,900 முதல் ரூ.4,671 வரை விற்பனையானது. கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.3,670 முதல் ரூ.4,479 வரை விற்றது. இது கடந்த ஆண்டை காட்டிலும் 60 முதல் 80 சதவீதம் விலை வீழ்ச்சியாகும்.

---

**சர்க்கரை உற்பத்தி 19% அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : 1/19/2012 12:38:48 AM



புதுடெல்லி: அக்டோபர் முதல் ஜனவரி 15ம் தேதி வரை, நாட்டின் சர்க்கரை உற்பத்தி 19 சதவீதம் அதிகரித்து 1.04 கோடி டன் ஆனது. 2010&11ன் இதே காலத்தில் இது 87.6 லட்சம் டன்னாக இருந்தது. அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலான 12 மாத காலம், சர்க்கரை உற்பத்தி சீசனாக கருதப்படுகிறது. இந்நிலையில், 2011&12ன் சீசன் தொடங்கியதில் இருந்து இதுவரை நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கரும்பு விளைச்சல் அமோகமாக உள்ளது. குறிப்பாக, சர்க்கரை உற்பத்தியில் முன்னணி வகிக்கும் மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், கர்நாடகாவில் மட்டும் ஜனவரி 15வரை உற்பத்தி 22 சதவீதம் அதிகரித்தது. மேலும், நடப்பு சீசனின் நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தி 2.6 கோடி டன்னாகும் என இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் கணித்துள்ளது.

---

**பூக்கள் விலை கிடுகிடு உயர்வு**

பதிவு செய்த நாள் : 1/19/2012 12:37:19 AM



ஆரல்வாய்மொழி : தோவாளை சந்தையில் நேற்று பூக்கள் விலை கடுமையாக உயர்ந்திருந்தது. கிலோ மல்லிகை ரூ.2000க்கும், கிலோ பிச்சி ரூ.1000க்கும் விற்பனையானது. பொங்கல் பண்டிகையையொட்டி, சில தினங்களாக பூக்களின் தேவை அதிகரித்ததால் விலை பல மடங்கு உயர்ந்திருந்தது. வழக்கமாக, கிலோ ரூ.100க்கு விற்ற பிச்சிப்பூ, ரூ.500க்கும், ரூ.200க்கு விற்கப்படும் மல்லிகை ரூ.700க்கும் விற்பனையானது. இந்நிலையில், கடும் பனிப்பொழிவு காரணமாக நேற்று சந்தைக்கு பூக்கள் வரத்து மிக,மிக குறைவாக இருந்தது. இதனால் பூக்கள் விலை கடுமையாக உயர்ந்தது. ஒரு கிலோ மல்லிகை ரூ.2000க்கும் பிச்சி ரூ.1000க்கும் விற்பனையானது. அரளி ரூ.150, சம்பங்கி ரூ.350க்கு விற்பனையாகின.

---

தினத் தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

## *ரூபாய் மதிப்பில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 43% அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

இந்தியாவின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி, ஏப்ரல்–நவம்பர் மாத காலத்தில், ரூபாய் மதிப்பு அடிப்படையில், 43 சதவீதம் உயர்ந்து ரூ.6,209 கோடியாக அதிகரித்துள்ளது. சிறிய ஏலக்காய், இஞ்சி, ஜாதிக்காய் மற்றும் ஜாதிபத்திரி ஏற்றுமதியில் வருவாய் அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.
அதே சமயம் அளவின் அடிப்படையில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி ஐந்து சதவீதத்திற்கு மேல் சரிவடைந்து 3.51 லட்சம் டன்னாக உள்ளது. இது, இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. பூண்டு, தனியா மற்றும் மிளகாய் ஏற்றுமதி அளவு குறைந்ததே இதன் பின்னணி என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
சென்ற நிதி ஆண்டின் ஏப்ரல்–நவம்பர் மாத காலத்தில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 3.72 லட்சம் டன்னாகவும், மதிப்பு அடிப்படையில் ரூ.4,336 கோடியாகவும் இருந்தது. நறுமணப் பொருள்கள் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது.

## நடப்பு பருவத்தில் இதுவரை சர்க்கரை உற்பத்தி 19 சதவீதம் உயர்வு



ஜெயஸ்ரீ போஸ்லே
பூனா
நடப்பு 2011–12 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) இதுவரையிலான காலத்தில் சர்க்கரை உற்பத்தி 19 சதவீதம் உயர்ந்து 1.05 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. அதாவது சென்ற 2010–11 பருவத்தின் இதே காலத்தை விட உற்பத்தி 17 லட்சம் டன் உயர்ந்துள்ளது.
சர்க்கரை உற்பத்தியில் உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகித்து வருகின்றன. இந்த மாநிலங்களில் ஒட்டுமொத்த அளவில் சர்க்கரை உற்பத்தி 22 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.
ஜனவரி 15–ந் தேதி நிலவரப்படி கரும்பு அரவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 516–ஆக உயர்ந்துள்ளது. இது, சென்ற பருவத்தின் இதே காலத்தில் 498–ஆக இருந்தது. இதே காலத்தில் உத்தரபிரதேசத்தில் உள்ள ஆலைகள் 3.47 கோடி டன் கரும்பை அரைத்துள்ளன. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில் 2.71 கோடி டன்னாக இருந்தது. இதே காலத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள ஆலைகள் அரைத்த கரும்பின் அளவு 3.15 கோடி டன்னிலிருந்து 3.46 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.



முதுமலை வனப்பகுதியில் சாலையோரத்தில் தீத்தடுப்பு கோடுகள் அமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

### கடும் பனி மற்றும் வெயில் காரணமாக

# முதுமலை காட்டில் வறட்சி தொடங்கியது

## காட்டுத்தீ ஏற்படுவதை தடுக்க வனத்துறையினர் தீவிர நடவடிக்கை

மசினகுடி, ஜன.19–

முதுமலை காட்டில் வறட்சி தொடங்கியது. இதனால் காட்டுத்தீ ஏற்படும் அபாயம் உள்ளதால் வனத்துறையினர் சாலையோரங்களில் தீத்தடுப்பு கோடுகளை அமைத்து வருகிறார்கள்.

**முதுமலை புலிகள் காப்பகம்**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள முக்கிய வனப்பகுதிகளுள் ஒன்று முதுமலை புலிகள் காப்பகம். இங்கு யானைகள், புலிகள், சிறுத்தைகள், மான்கள் உள்பட பல்வேறு வன விலங்குகள் காணப்படுகின்றன. இது மட்டுமின்றி விலை உயர்ந்த மரங்களும், செடிகளும், கொடிகளும் உள்ளன.

இந்த நிலையில் ஆண்டுதோறும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் முதுமலை புலிகள் காப்பகத்தில் வறட்சி ஏற்படுவது வழக்கம். இதனால் காட்டுத்தீ ஏற்பட்டு, வனப்பகுதியை நாசப்படுத்தி விடுகிறது. இதை தடுக்க வனத்துறையினர் தீத்தடுப்பு கோடுகளை அமைக்கிறார்கள்.

**காட்டுத்தீ**

இதே போல் இந்த ஆண்டும் தற்போது வறட்சி தொடங்கி உள்ளது. முதுமலை காட்டில் கடந்த சில நாட்களாக பகல் வேளையில் கடும் வெயிலும், இரவு நேரத்தில் கடும்பனிப்பொழிவும் நிலவுகிறது. இதனால் காட்டில் உள்ள மரங்கள், செடி–கொடிகள், புற்கள், முட்புதர்கள் அனைத்தும் காயத்தொடங்கி விட்டன.

பச்சைபசேல் என்று காணப்பட்ட வனப்பகுதி தற்போது தொடங்கி உள்ள வறட்சியின் காரணமாக, பசுமையை இழந்து வருகிறது. இதனால் காட்டுத்தீ ஏற்படும் அபாயம் உள்ளது. இதை தடுக்க வனத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து உள்ளனர்.

**தீத்தடுப்பு கோடுகள் அமைக்கும் பணி தீவிரம்**

இதன்படி முதல்கட்டமாக சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் முக்கிய சாலையாக உள்ள மசினகுடி– தெப்பக்காடு சாலை, தொரப் பள்ளி – கக்கனல்லா சாலை ஆகிய சாலை ஓரங்களில் தீத்தடுப்பு கோடுகள் அமைக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதனால் சாலையோரங்களில் எளிதில் தீப்பற்றும் வாய்ப்பு குறைந்துள்ளது என்று வனத்துறையினர் தெரிவித்தனர்.

மேலும் சாலை வழியாக செல்லும் வாகன ஓட்டிகளும், சுற்றுலா பயணிகளும் புகை பிடித்து விட்டு, சிகரெட், பீடி துண்டுகளை காட்டுக்குள் வீசக்கூடாது என்று அறிவுறுத்தி, அறிவிப்பு பலகைகளை வைத்துள்ளனர். இதை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# வேளாண்மை செய்திகள்

## நிலக்கடலை பயிரை தாக்கும் நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

தமிழகத்தில் பயிரிடப்படும் மொத்த எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை முதலிடம் வகிக்கிறது. தாவர எண்ணெய் உற்பத்தியில் நிலக்கடலை முக்கிய இடம் பெறுவதோடு நல்ல தரம் வாய்ந்த புரதம், தேவையான அளவு சத்துகள் அடங்கிய உணவுப் பொருளாக பயன்படுகிறது.

**வேர் நோய்**

நிலக்கடலை பயிரை பூஞ்சாணம், நச்சு உயிரி நோய்கள் தாக்கி விளைச்சலில் அதிக அளவு சேதத்தை ஏற்படுத்துகிறது. அவற்றில் நிலக்கடலையை பாதிக்கும் பூஞ்சாண நோய்களான மஞ்சள் பூசணம் அல்லது அப்லாவேர் நோய் மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது.

மஞ்சள் பூசணம் நோய் அஸ்பெர்ஜில்லஸ் பிளேவஸ் என்ற பூஞ்சாண நோய்க்காரணி மூலம் உண்டாகிறது. இந்த நோய் இளம் பருவத்திலேயே அதாவது விதை முளைக்கும் பருவத்தில் ஏற்படுவதால் விளைச்சலில் அதிகபாதிப்பை ஏற்படுத்துகிறது.

**அறிகுறிகள்**

மேலும் இந்த பூஞ்சாணம் விதைகளை தாக்கி அவற்றை முளைக்க விடாமல் செய்கின்றன. இதன் காரணமாக இலைகள் மண்ணில் இருந்து வெளியே வராமல் விதைகள் கருகி விடுகின்றன. இந்த பூஞ்சாணம் பாதி முளைத்தும், முளைக்காத விதையிலைகளைத் தாக்குவதால் விதையிலைகள் சுருங்கி சிறுத்து கருகி விடுகின்றன. விதையிலையில் இருந்து முளைவேர், விதையிலை ஆகியவை வெளியே வருவதற்கு முன்பாகவே அழுகி விடுகின்றன.

பாதிக்கப்பட்ட விதைகள் அனைத்தும் சுருங்கியும், வறண்டும் மஞ்சள் கலந்த பச்சை நிற பூஞ்சாண தூள் வித்துகளை மூடியிருக்கும். இந்த பூஞ்சாணம் மண்ணுடன் தொடர்புள்ள இளம் செடிகளின் தண்டுப் பகுதியை தாக்கி மடியச் செய்கின்றன. இதே போல் விதை இலைகளில் காய்ந்த பழுப்பு புள்ளிகள், பழுப்பு நிற சுருக்கங்கள் ஓரங்களுடன் காணப்படும். இவ்வாறு பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி பார்த்தால் இரண்டாம் நிலை வேர்கள் உருவாவது பாதிக்கப்பட்டு இருக்கும். ஆழமாக விதைத்தல், அதிகமான மண் வெப்பநிலை, குறைந்த மண் ஈரப்பதம் ஆகியவை நிலக்கடலை பயிர்செய்ய ஏற்ற சூழ்நிலை ஆகும்.

**நோயை கட்டுப்படுத்தும் முறைகள்**

நிலக்கடலை பயிரில் விதை மண்ணின் மூலமாகவும், செடியின் மக்கிய பாகங்கள் மூலமாகவும் நோய் பரவுகிறது. இதற்கு நல்ல தரமான நோய் பாதிக்கப்படாத விதைகளை தேர்வு செய்ய வேண்டும். விதையின் மேற்பகுதியை சேதப்படுத்துவதை தவிர்க்க ஆழமாக விதைப்பதை தவிர்க்க வேண்டும்.

நிலக்கடலை விதைகளை அதிக ஈரம் இல்லாமல் நன்கு காயவைத்து பின் சேமித்து வைக்க வேண்டும். இதன் மூலம் பூஞ்சாணங்கள் தாக்குதல் இல்லாமல் பாதுகாப்பதுடன், முளைப்புத்திறன் குறைவதையும் தடுக்கலாம்.

**பயிர் சுழற்சி முறை**

பூஞ்சாண தாக்குதலை தடுக்க திராம் 3 கிராம் அல்லது கார்பெண்டாசிம் 2 கிராம் என்ற கலவையை கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். இந்த பூஞ்சாணம் ஒரு வலிமையில்லாத ஒட்டுண்ணி என்பதால் நல்ல உழவியல் முறைகளை மேற்கொண்டால் நிலக்கடலையின் முளைப்புத்திறன் மற்றும் விதை இலைகளின் வளர்ச்சி அதிகமாவதுடன் அஸ்பெர்ஜில்லஸ் பிளேவஸ் என்ற நோய்க் காரணிகளின் பாதிப்பு குறையும்.

விதைக்கும் முன் விதைகளை டிரைகோடெர்மா விரிடி என்ற பூசணக் கொல்லியை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் அல்லது சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்ற பாக்டீரியா கொல்லியை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். மேலும் நிலத்தில் தானியப்பயிர் அதை தொடர்ந்து நிலக்கடலை என்ற விகிதத்தில் பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ள வேண்டும்.

**உணவுப்பொருள் தயாரிப்பில் பயன்படும்**

## இயற்கை சாய மரம் 'பிக்ஸா ஓரல்லானா'



இயற்கை முறை சாயத்தை பயன்படுத்துவதில் உலகின் முன்னோடிகளாக இந்தியர்கள் விளங்குகிறார்கள். இந்தியாவில் சுமார் 450 வகையான தாவரங்களில் இருந்து சாயம் பிரித்தெடுக்கப்படுகின்றன. இயற்கை சாயம் நச்சுத்தன்மை அற்றதாக இருப்பதால் உணவு பொருள் தயாரிப்பில் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

**பிக்ஸா ஓரல்லானா**

பிக்சின் என்ற இயற்கை ஆரஞ்சு நிறமியானது பிக்ஸா ஓரல்லானா என்ற மரத்தில் இருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. இந்த மரம் மத்திய மற்றும் தென் அமெரிக்காவை தாயகமாக கொண்டது. 3 முதல் 4 மீட்டர் வரை உயரம் வரை வளரக்கூடியது. இந்தியாவில் தமிழ்நாடு, மராட்டியம், கேரளா, கர்நாடகா, மேற்கு வங்காளம், அசாம் மாநிலங்களில் வளர்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கோவை, நெல்லை, மதுரை ஆகிய மாவட்டங்களில் பெருமளவில் வளர்க்கப்படுகிறது. உணவுப்பொருளில் கலக்கப்படும் பொருட்கள் இயற்கையானதாக இருக்க வேண்டும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்ப்பை இந்த மரத்தில் எடுக்கப்படும் நிறமி நிவர்த்தி செய்கிறது.

**பிக்சின் சாயம்**

பிக்ஸா ஓரல்லானா மரம் கிளைகளை தரைப் பக்கம் படரவிட்டு குடைபோல விரிந்து வளரக்கூடியது. இதன் இலைகள் வெற்றிலையின் இலை அமைப்பை ஒத்து இருக்கும். பூக்கள் கொத்தாகவும், சிகப்பு, வெள்ளை, இளஞ்சிகப்பு, வெள்ளை கலந்து 3 வித நிறங்களில் காணப்படும். இதன் காய் சிவப்பு, பச்சை, பழுப்பு, பச்சையும், சிவப்பும் கலந்து, சிவப்பும் பழுப்பும் கலந்தும் பல வித வண்ணங்களில் காணப்படும்.

விதைகளை சுற்றிலும் சதைப்பற்றுள்ள அமைப்பை கொண்டது. அதில் இருந்து ஆரஞ்சு நிறமுடைய பிக்சின் சாயம் பிரித்தெடுக்கப்படுகிறது. பிக்சின் அளவானது 0.7–3.5 சதவீத அளவும், பலதரப்பட்ட கரோட்டினாய்டு நிறமிகளை கொண்டது. அதில் சிஸ்பிக்சின் மட்டும் 82 சதவீதம் உள்ளது. இந்த மரம் வெப்பம், மித வெப்பம், பனி பொழிவு இல்லா பகுதிகளில் நன்கு வளரும் தன்மை கொண்டது.

**நடவு-அறுவடை**

எல்லா வகையான மண்ணிலும் வளரும் தன்மை கொண்டது. நல்ல வடிகால் வசதி கொண்ட, நீர் தேங்காத நிலங்களில் நன்கு வளரும். இதை பண்ணை காடுகளில் பயிரிடலாம். நல்ல சூரிய ஒளி கொண்ட பகுதிகள் மரம் வளர்ச்சிக்கு உதவும். பிக்ஸா ஓரல்லானா மரத்தின் நாற்றுகளை விதைகள் மூலமாக உற்பத்தி செய்யலாம்.

பிளவு ஒட்டு, தண்டு குச்சி மூலம் விதையில்லா இனப்பெருக்கம் செய்யலாம். 6 மாத நாற்றுகளை நடவு செய்த 1½ முதல் 2 ஆண்டுகளில் பூக்கள் பூக்க ஆரம்பித்து விடும். விதையில்லா இனப்பெருக்க முறையில் உருவாக்கிய நாற்றுக்கள் முதல் ஆண்டிலேயே பூக்க ஆரம்பித்து விடும். பூக்கள் பூத்து 1 மாதத்தில் காய்கள் காய்க்க தொடங்கி விடும். செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் காய்களை அறுவடை செய்யலாம்.

**பயன்கள் என்னென்ன?**

பிக்சின், ஆரல்லின் என்ற 2 சாயமேற்றி நிறமிகள் விதையில் இருந்து பிரித்தெடுக்கப்படுகின்றன. கேரமல் நிறமிக்கு பிறகு அனட்டோவானது சிறந்த சாயமேற்றியாக பயன்படுகிறது. அனட்டோ சாயமானது உணவுப்பொருள்களிலும், துணிகளுக்கு சாயமேற்றவும், சோப்பு, வெண்ணை, செயற்கை வண்ணம், உதட்டுசாயம் போன்றவற்றிற்கு நிறமேற்றியாக பயன்படுகிறது.

அரிசி, கூட், சாக்லெட் ஆகியவற்றில் சுவையூட்டவும், மாமிச உணவு தயாரிப்பிலும் இந்த நிறமிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் வேர் மாமிசத்தை சுவையூட்டவும், தலைமுடி சாயம் தயாரிப்பிலும், உதட்டு சாயம் தயாரிப்பிலும், தரையை பளபளக்கும் திரவங்கள் தயாரிப்பிலும், மருந்து தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது.

–தகவல்: **குமரன்**, கிருபா, துரைராசு, வேளாண் பல்கலைக்கழக, வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், **மேட்டுப்பாளையம்**.

## உயர் நெல் விளைச்சலுக்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மை

மானாவாரி நெல் சாகுபடி பரப்பளவு குறைந்து வரும் நிலையில் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், சீரான விளைச்சலை பெறவும் வேளாண்மை தொழில்நுட்பங்களை சீரிய முறையில் பின்பற்ற வேண்டும். மானாவாரி நெல் விளைச்சலை அதிகரிக்க ரகங்களை தேர்ந்தெடுத்தல், சீரிய உழவியல், நீர், களை நிர்வாகம், பயிர் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த உர மேலாண்மை முறைகளை பின்பற்ற வேண்டும்.

**உர மேலாண்மை முறை**

ஒருங்கிணைந்த உர நிர்வாகம் நெல் உற்பத்தியில் ஒரு முக்கிய இடத்தை பெற்றுள்ளது. ஏனெனில் நெல்லின் விளைச்சல் சுமார் 40 விழுக்காடு உர மேலாண்மையை சார்ந்தே உள்ளது. இயற்கை எருக்களான பசுந்தாள் உரம், தொழு உரம், மண் புழு உரம், மக்கிய தென்னை நார்க்கழிவு, செயற்கை உரங்களான யூரியா, சூப்பர் பாஸ்பேட், மூரியேட் ஆப் பொட்டாஷ், உயிர் உரங்களான பாஸ்போ பாக்டீரியா, அசோஸ் பைரில்லம், நுண்ணூட்ட சத்துக்கள் போன்றவற்றை நெல்லுக்கு உணவாக அளிப்பதே ஒருங்கிணைந்த உர மேலாண்மை ஆகும்.

**மண் ஆய்வு**

மண் ஆய்வு அடிப்படையில் வயலில் வேதியியல் உரங்களை இட வேண்டும். மண் ஆய்வின் மூலம், மண்ணில் இருந்து பயிருக்கு கிடைக்கும் உர சத்தின் அளவையும், பயிரின் உர தேவையையும் தீர்மானிக்கலாம். இதனால் தேவைக்கு குறைவாகவோ, அதிமாகவோ உரமிடுவதை தவிர்க்கலாம். வயலில் மண் ஆய்வு செய்யப்படாமல் இருந்தால் பொதுவாக பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இட வேண்டும்.

மானாவாரி பகுதி, நெல் ரகங்களுக்கு எக்டேருக்கு 20 கிலோ தழைச்சத்தும், தலா 10 கிலோ மணிச்சத்தும், சாம்பல் சத்தும் பரிந்துரைக்கப்படுகின்றன. இதில் அடியுரமாக மணிச்சத்தை, ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும். மணிச்சத்து நெற்பயிரின் இளம் பருவத்தில் வேர்பிடித்து நன்றாக வளர்வதற்கும், பூக்கள் பூப்பதற்கும், நெல் மணிகள் வளர்ச்சி, எண்ணிக்கை, முதிர்வடைதலை சீராக்கும்.

**நெல் விளைச்சல்**

நெல் விளைச்சலை பெருக்குவதற்கு, எக்கருக்கு 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 300 கிலோ தொழு உரத்துடன் கலந்து 1 மாதம் காற்று புகாமல் வைத்து, ஊட்டமேற்றிய தொழு உரமாக மாற்றி கடைசி உழவின் போது இட வேண்டும். இரும்பு சத்து குறைபாடுள்ள நிலத்தில் அடியுரமாக இரும்பு சல்பேட்டை எக்டேருக்கு 50 கிலோ என்ற அளவில் வேண்டும்.

மானாவாரி நெல்லுக்கு சிங்க் சல்பேட்டை, எக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் விதைப்பின் போது இட வேண்டும். இலைவழி உரமாக யூரியா 1 சதவீதம், டி.ஏ.பி.–2 சதவீதம் கொண்ட கரைசலை குருத்து உருவாகும் போது 2 முறையும், 10 நாள் கழித்து மீண்டும் 1 முறையும் தெளிக்க வேண்டும். வேதியியல் உரத்தை செம்மையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்துவதன் மூலம் நெல் விளைச்சலை அதிகரிக்கலாம்.